**தலைப்பு 256 - கம்பஹா மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை மற்றும் கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை காசுப் பாய்ச்சல் கூற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு மற்றும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின்

ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) குறை நிரப்பு மதிப்பீடு தயாரித்தல்** | | |
| 256-1-1-2-2104 செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் 118,600,000 ஆன மாற்றல்கள் குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் ரூபா 350,000,000 என மொத்தம் ரூபா 468,600,000 ஆன மிகை நிதிஏற்பாடு மேற் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்தளவு பாதிடப்பட்ட நிதிஏற்பாடான ரூபா 400,000,000 இல் 117 சதவீதமான அளவாக இருந்தது. | வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இந்த ஆண்டில் 2104 புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அண்ணளவாக ரூபா 1000 மில்லியன் கோரப்பட்டது. வருடாந்த மதிப்பீட்டில் போதிய ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாமையால், கட்டிடம் நிர்மாணப் பணிகள் தடைபடலாம் என்பதால் மேலதிக ஒதுக்கீடுகள் குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் ஒதுக்கப்பட்டதுடன் எஞ்சிய , ஒதுக்கீடுகள் மூலதன செலவின விடயங்களின் கீழ் இருந்தால், அவற்றை நி.பி 66 இன் கீழ் மாற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. வரவு செலவுத் திட்ட எல்லையை மீறாமல் நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் குறித்த நிதிஏற்பாட்டை அமைச்சு செயலாளரின் பரிந்துரை வரவு செலவுத் திட்ட பணிப்பாளரின் அங்கீகாரத்தின் மாற்றப்பட்டன. | நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் இயலுமான அளவு சரியாகவும் முழுமையாகவும் மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) மிகை மதிப்பீடு தயாரித்தல்** | | |
| 4 மூலதன செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்ட காரணத்தினால் நிதிப்பிரமாணம் 66 இன் | இந்த நிதிஏற்பாடு கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையின் கீழ் பொருட்கள் பொதிகள் விநியோகம், காய்கறிகள் கொள்வனவு மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் | இயலுமான அளவு சரியாக மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் மாற்றல்களின் கீழ் 38 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான அளவொன்று ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | இழப்பீடு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டது. இந்நிலையில், ரூபா 10,000 பொருட் பொதி இருந்த பொருட்கள் ரூபா 5,000 ஆகக் குறைக்கப்பட்டமை, குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு மாத்திரம் வழங்குவது, சில பயனாளிகளுக்கு ரூபா 5,000 மாத்திரம் வழங்கப்பட்டமை, காய்கறி கொள்வனவு திட்டத்தை நிறுத்தி, Express pearl கப்பல், சேதம் காரணமாக பயனாளிகள் இழப்பீடு பெறுவதற்கு தகைமை பெறாமை அடிப்படையில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. | |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டின் போது வெவ்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள 51 இனால் வெவ்வேறு செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு கம்பஹா மாவட்ட செயலாளருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,433,318,046 ஆன நிதிஏற்பாடு களிலிருந்து ரூபா 391,985,651 ஆன நிதிஏற்பாடு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு. | ஆண்டின் இறுதியில், செயற் திட்டங்களுக்கு பொருட்களை கொள்வனவு செய்வதில் உள்ள சிக்கல்கள் மற்றும் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்கள், Covid -19 இன் கீழ் ஏற்பாடுகளில் சேமிப்பு உட்பட கையில் உள்ள பட்டியல்களின் பெறுமதி கிட்டத்தட்ட ரூபா 70 மில்லியனுக்கு அண்மித்த காணப்பட்டதால் நிதிஏற்பாடுகளைப் பயன்பாடு உயர்ந்த பட்ச சிக்கல்கள் உருவாகியிருந்தன. | அங்கரிக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு களிலிருந்து செயற் திறன் மிக்கதாகப் பயன்படுத்த தேவை யான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மரணித்ததாக அறிவிப்பதற்கு தாமதமானமை, ஓய்வூதிய சுற்றறிக்கைகளுக்கு இணங்காமை மற்றும் ஏனைய காரணங்களின் பேரில் கம்பஹா மாவட்டத்தினுள் உள்ள 13 பிரதேச செயலகங்கள் மூலம் 2021 திசெம்பர் 31 இல் | இந்த கூடுதலான கொடுப்பனவு செயற்பா:டு தொடர்பான நடவடிக்கை எடுத்தல் மற்றும் உரிய நடவடிக்கை எடுப்பது ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பாகும். ஆனால், கடந்த 10 | கூடுதலான கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும் |

| | |
|---|---|
| உள்ளவாறு ஓய்வூதியம் பெற்று வந்த 362 ஓய்வூதியம் பெறுவேருக்கு ரூபா 33,052,527 ஆன ஓய்வூதியம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டுகளில் தலைமைக் கணக்காளரின் வழிகாட்டுதலின் பேரில், பிரதேச செயலாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கியதன் மூலம், இவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தில் கணிசமான தொகை மீட்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| **(அ) பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| i 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்கம் மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/.2008(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | கம்பஹா மாவட்ட செயலகம் பிரஜைகள் சேவை நாடுனர் சாசனத்தை தொகுத்து அமுல்படுத்துவதை கண்காணித்து செயற்பாட்டு நடைமுறையை மேற்பார்வை செய்தல் மதிப்பிடுவதற்காக நடைமுறைமையொன்றை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பஹா மாவட்ட செயலகத்தின் பிரஜை சேவை நாடுனர் சாசனத்தை தொகுத்து நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்பார்வையிட்டு மதிப்பீடு செய்யும் உத்தியோகத்தர்களின் செயலாற்றல் மூலம் மேற்கொள்ளப்டுகினற்றது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii. 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கி.மீ தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்திய பின்னர் அல்லது இயந்திரம் தொடர்பாக பிரதான திருத்தமொன்றின் பின்னர் அல்லது காரணங்களுக்கு இடையே | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து 2021 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களில் மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் வாகனங்கள் எரிபொருள் எரிவு | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதலாவது சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய போதிலும் கம்பஹா மாவட்ட செயலகம் குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. என்ஜின்கள் திருத்தம் செய்யப்பட்ட வாகனங்களை வேகமாக ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாதென மோட்டார் பரிசோதகரால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வானங்களை எரிபொருள் எரிவு பரிசோதனைக்கு அனுப்புவதற்கு பரிந்துரைக்கும் திகதிகள் வழங்கப்படும் என தலைமை அறிவித்துள்ளார். | |
| (ஆ) | 2017 யூலை 03 ஆந் திகதிய 130/09/14/8 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | களனி பிரதேச செயலகத்தின் இரண்டு கிரயம சேவையாளர்கள் சலுகை அடிப்படையிலான மோட்டார் சைக்கில்களைப் பெற்றிருக்கும் போது 60 வயதினை பூர்த்தி செய்ய முன்னர் ஓய்வுபெற்றமையால் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் மோட்டார் சைக்கில்களின் சந்தைப் பெறுமதியான ரூபா 273,420 தொகையை தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு மீளச் செலுத்த வேண்டிய போதிலும் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா 273,420 தொகையை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து 2022 யூன் மாதத்தின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு முன்மொழியப்பட்டுள்ளது | - மேற்படி - |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13(3) ஆம் பிரிவு | பதில் கடமை நியமனமொன்று நிரந்தர நியமனமொன்று வழங்கப்படும் வரையே மேற்கொள்ள முடியுமான போதும் நீர்அெகாழும்பு, அத்தனகல்ல மற்றும் மினுவங்கொடை பிரதேச செயலகங்களின் கிராம சேவையாளர்கள் முறையே 07, 27 மற்றும் 06 பேர் 03 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான காலம் பதில் கடமை புரிந்திருந்தனர் | தற்போது சேவையிலுள்ள கிராம சேவையாளர்கள் ஓய்வுபெறல், மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் பெறுதல் காரணமாக வெற்றிடங்கள் ஏற்படுகின்றன. எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் புதிய கிராம சேவையாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படாமையால் | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. ஆதலால் சேவையிலுள்ள கிராம சேவையாளர்கள் பதில் கடமைக்காக நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 1647(உ) | மினுவங்கொடை பிரதேச செயலகத்தின் வாகன பொறுப்பாளரால் தமது பொறுப்பில் உள்ள மோட்டார் வாகனங்கள் வாகனங்கள் பற்றிய வாகன பதிவு இலக்கம், வாகனத்தின் வகை, வடிவமைப்பு உட்பட பொறுப்பேற்ற திகதி, கையளிக்கப்பட்ட திகதி மற்றும் அது தொடர்பான விபரங்களை ஏனைய முறையான தகவல்களையும் உள்ளடக்கிய வாகனங்கள் தொடர்பான அட்டவணையொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களின் படி எதிர்காலத்தில் குறித்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | திப்பிரமாணம் 1646 | மினுவங்கொடை பிரதேச செயலகத்தின் வாகன ஓட்டப் பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த ஓட்டப் பதிவேடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பமென அறிவிக்கப் பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 மோசடி தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகர பிரதேச செயலகத்தில் 2014 யூலை 15 ஆந் திகதி நடந்த காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த பணம் காணாமல் போனமை தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(1)(ஆ) பிரகாரம் நடாத்தப்பட்ட இறுதி அறிக்கையின் பிரகாரம் இப்பணத் தொகை காணாமற் போனது தொடர்பாக பிரதேச | 2014 ஜூலை 14 ஆம் திகதி மஹர பிரதேச செயலகத்தில் பணம் காணாமல் போனமை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையின் பிரகாரம், பொறுப்புக்கூற வேண்டிய் நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்தும் மத்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்காக தலா ரூபா 32,247.14 வீதம் | பரிசோதனை குழு அறிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க |

செயலாளர் கணக்காளர், நிதி உதவியாளர், மற்றும் சிறாப்பர் ஆகிய உத்தியோகத்தர்களிடமிருந்து சமமாக ரூபா 270,561 வீதம் சமமாக அறவிடப்பட வேண்டுமென பரீட்சிப்பு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கடிதத்தில் அறவிடுவதற்காக பரிந்துரை மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் சம்பந்தப்பட்ட அறவிடல் இடம்பெற்றிருக்கவில்லை. இந்நட்டத் தொகையை கொடுப்பனவு செய்வதற்காக நான்கு உத்தியோகத்தர்களும் விருப்பமின்மையை தெரிவித்திருந்ததால் இந்நட்டம் தொடர்பாக பரீட்சிப்பதற்காக உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் மாவட்ட செயலாளரினால் 2022 ஏப்ரல் மாதத்தின் போது புதிய பரிசோதனை குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக பரிசோதனை செலவிடப்பட்ட பணம் விளைவ்வறதாக இருந்ததுடன் மீண்டும் பரிசோதனை குழுக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது.

அறவிடுவதற்காக 2021 நவம்பர் 01 ஆம் திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி அதற்கு சம இலக்க மற்றும் 2021 டிசம்பர் 14 ஆம் திகதிய மேல் மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய நட்டத்திற்காக தலா ரூபா 228,946.50 வீதம் செலுத்துமாறும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சம்பந்தப்பட்ட அனைத்து பொறுப்பு கூற வேண்டிய நான்கு உத்தியோகத்தர்களும் முழு இழப்பீட்டையும் செலுத்து வதற்கான உடன்பாடு இல்லாததால், உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர். F/DA/06/WRI02/003 மற்றும் 2022 பெப்ரவரி 10, திகதிய கடிதத்தின் படி புதிய விசாரணைக் குழுவின் மூலம் நி.பி 104(1)(ஆ) புதிய பரிசோதனையொன்றை நடத்துவதற்காக 2022 மார்ச் 22 ஆந் திகதி உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சு செயலாளரினால் . புதிய பரிசோதனைக் குழுவை நியமிப்பதற்கு வழங்கிய அங்கீகாரத்தின் பேரில் மாசெ /P/1/16 மற்றும் 2022 ஏப்ரல் 08 ஆந் திகதி புதிய பரிசோதனைக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 03 மாதங்களுக்குள் அறிக்கையை தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேண்டியதுடன்புதிய பரிசோதனை குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 2.5 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இறந்துபோன, ஓய்வுபெற்றுச் சென்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மற்றும் வேலையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதிகளின் முழுத்தொகை ரூபா 3,946,286 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதி 01 வருடம் முதல் கொண்டு 05 வருடங்களுக்கு மேலான கால வீச்சில் இருந்து வந்த போதிலும் அம்மீதிகளை அறவிடப்படுவதற்கான பின் தொடர் செயற்பாடுகள் பலவீனமான நிலையில் உள்ளன. | இந்தக் கடன் நிலுவைகளை அறவிடுவதற்காக தொடர்ந்து பின்தொடர் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும்பாலான கடன்களை அந்தந்தக் கடன் பெற்றவர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையில் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏனைய மீதிகளை 2022 நவம்பர் 30 இற்குள் இயளுமான அளவில் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிப் பிரமாணம் 371 மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 371(2)(இ) இன் பிரகாரம் செயல்நிமித்த கட்டுநிதி வழங்கல் எப்போதும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலகம் மற்றம் மீரிகம மற்றும் நீர்கொழும்பு பிரதேச செயலகங்கள் மூலம் பதவி நிலைத்தரமல்லாத உத்தியோகத்தர்களுக்காக 81 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,089,288 ஆன முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. | செயல்நிமித்த கட்டுநிதி வழங்கல் வெவ்வேறு செயற்திட்டங்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு நேரும் சந்தர்ப்பங்கள் உருவாகுவதுடன் மாவட்ட செயலகத்தினுள் இம்முற்பணத்தை பெற்றுக்கொள்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட பதவி நிலைத் தர உத்தியோகத்தர்கள் இருப்பதால் மேற்கொள்ள முடியாது அதன் காரணமாக குறித்த நிகழ்சசித்திட்டங்களுக்காக மதிப்பீடொன்ற தயாரிக்கப்பட்டு எது அங்கீகாரத்துடன் குறித்த விடயப்பொறுப்பு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு முற்பணம் வழங்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் செயல்நிமித்த கட்டுநிதி வழங்கல் இடம் பெறவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிப் பிரமாணம் 371(ஆ) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறக்கையின் பிரகாரம் ஒரு தடவையில் வழங்க கூடிய செயல்நிமித்த கட்டுநிதி எல்லை ரூபா 100,000 ஆக இருந்த போதும் 2021 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலகம் மற்றும் மினுவங்கொடை பிரதேச செயலகத்தின் மூலம் 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 100,000 ஆன செயல்நிமித்த முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | 08 சந்தர்ப்பங்களின் போது இந்த செயல் நிமித்த கட்டுநிதி அவசர அனர்த்த நிலைமையில் வழங்கப்பட்டிருந்தது.மேலும் கொரோனா நிலைமையால் வியாபார நிலைய உரிமையாளர்கள் கடன் அடிப்படையில் பொருட்களை வழங்க விருப்பமின்மையால் இந்த உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்க்பபட்டிருந்தது. மிக விரைவில் முற்பணத்தை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 371 மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.5 முற்பண வழங்கலும் தீர்வுசெய்தலும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூன்றாம் தரப்பினர்களுக்காக மீண்டும் கொடுப்பனவு செய்வதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒப்பந்த நிறுத்தி வைத்தல் கணக்குகள் 361 சந்தர்ப்பங்கள் உட்பட 362 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலாவதியான ரூபா 25,979,753 பெறுமதியான மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை | மூன்றாம் தரப்பினர்களுக்காக மீண்டும் கொடுப்பனவு செய்வதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒப்பந்த நிறுத்தி வைத்தல் வைப்புக்கள் (2 ஆண்டு களுக்கு மேற்பட்ட) இயலுமான வரை 2021 திசெம்பர் 31 வரை தீர்வு செய்வதற்கு தேவையான ஆலோசணை வழங்கப்பட்டுள்ளன. | ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் பூர்த்தி செய்திருந்தால் மற்றும் உத்தரவாதக் காலத்தை பூர்த்தி செய்திருந்தால் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் வைப்புப் பணம் உரிய கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | காணி வைப்புக்கள் கணக்கில் 77 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 86,883,880 ஆன 10 ஆண்டுகளை மிகைத்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை | கடந்த 10 ஆண்டுகளில் காணி வைப்புக்களை தீர்வு செய்வதற்காக தேவையான ஆலோசணை வழங்கப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலாளர்கள் அதிகளவில் முயற்சிகளை எடுத்துள்ளனர். குறித்த இழப்பீட்டு கொடுப்பனவிற்காக அந்த ஆதனங்களை தீர்வுசெய்தல் மற்றும் இழப்பீட்டினை பெற்றுக் | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்வதை காணி உரிமையாளர்கள் நிராகரித்தமை மற்றும் வருட இறுதியில் கட்டுநிதி போதியளவில் இல்லாமையால் தீர்வு செய்யும் சிக்கல் உருவாகியிருந்தது. | |

## 2.7 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மினுவங்கொடை, அத்தனகல்ல மற்றும் நீர்கொழும்பு பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களுக்குரிய திவநெகும சமுதாய வங்கிகள் காணப்படுவதுடன் அவ்வங்கிகள் மூலம் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த கடன்தொகையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 254,159,657 ஆன கடன் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொரோனா தொற்றுநோய் காரணமாக கடன் வாங்குபவர்களின் வருமான ஆதாரங்கள் முடக்கப்பட்டதன் காரணமாக கடன் தவரிப்புச் செய்தல் அதிகரித்துள்ளது. இதே நிலை நாடளாவிய ரீதியில் காணப்படுவதால் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் கடனை செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்கியுள்ளது. கடன் மறுசீரமைப்பு திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் சமுர்த்தி வங்கி இந்த காலதாமதமான கடன்களை அறவிட்டு வருகிறது. | கடன் அறவீடுகளை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) | ஒரு கிராம சேவையாளர் பிரிவிற்கு ஒரு கிராமிய கைத்தொழில் முயற்சியாளரை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மினுவாங்கொடை பிரதேச செயலகத்தினால் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,262,082 பெறுமதியான 08 காசோலைகள் எழுதப்பட்டிருந்தன. 2022 பெப்ரவரி 07 ஆம் திகதி வரை பிரதேச செயலகத்திற்கு பொருட்கள் கிடைக்கப்பெறாதிருந்ததுடன் விடயப்பொறுப்பு உத்தியோகத்தரால் அக் | நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதுவரை 4 காசோலைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள நான்கு காசோலைகளான ரூபா 1,260,000 , ரூபா 436,450 , ரூபா 98,794 மற்றும் ரூபா 110,000 ஆகிய காசோலைகள் உத்தியோகத்தரின் பொறுப்பில் உள்ளன. விரைவில் அந்தந்த நிறுவனங்களுக்கு வழங்க எடுப்பேன். | பொருட்கள் கிடைத்த பின்னரே காசோலைகளை எழுத வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காசோலைகளை வழங்காமல் தனது பொறுப்பில் காசோலைகளை வைத்துள்ளார். நிதிப்பிரமாணம் 386(4) இன் காசோலைகளின் செல்லுபடியாகும் காலமும் முடிவடைந்திருந்தது. | | |

## 2.8 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 1647(உ) பிரகாரம் கணக்காய்வு பரிசோதனைக் உட்படுத்தப்பட்ட மீரிகம பிரதேச செயலகத்தில் உள்ள வாகனங்களின் வகை, பதிவு இலக்கம், பொறுப்பேற்ற திகதி, கையளிக்கப்பட்ட திகதி மற்றும் ஏனைய முக்கியமான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்க வேண்டிய வாகனப் பட்டியல் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் அட்டவணைப்படுத்தும் பட்டியலொன்று பேணப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அலுவலகத்தனி இரண்டு வாகனங்களுக்காக உரித்தாக்க நடவடிக்கை எடுத்து தனியான பராமரிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வாகனங்கள் தகவல் உள்ளடக்கப்பட்ட பதிவேடோன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | மீரிகம பிரதேச செயலகத்தினால் நிதிப்பிரமாணம் 1647(இ) பிரகாரம் பேணப்பட வேண்டிய எரிபொருள் பயன்பாடு தொடர்பில் இருப்பு பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் பயன்பாட்டு பதிவேடொன்று பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் எவ்வாறாயினும் எரிபொருள் வழங்கும் பதிவேடொன்று முறையாக நடாத்திச் செல்லப்படுவதால் எரிபொருள் வழங்கல் மறையாக வழங்கப்படுவதுடன் வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் நாளாந்தம் நாளதுவரையாக்கப்பட்டு வருவதால் எரிபொருள் பயன்பாடு அதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஏப்ரல் 27 ஆந் திகதிய HAF-3-ADMIN 04-002 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் ஒரு கிராம சேவையாளர் அலுவலகம் ஓராண்டிற்கு மூன்று மறை நிர்வாக கிராம உத்தியோகத்தரால் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் மினுவங்கொடை, அத்தனகல மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேசங்களுக்குரிய கிராம சேலைவயாளர் பிரிவுகளில் 121, 151 மற்றும் 39 என்பவற்றிற்கு இடையே முறையே 61, 94 மற்றும் 13 என ஒரு தடவை பரீட்சிக்கப்பட்டிருந்தது. | அந்த காலப்பகுதியில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையில் அலுவலக பரீட்சிப்பின் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை நிறைவேற்றாமல் இருந்ததுடன் இவ்வாண்டின் போது அந்நடவடிக்கைகளை உரிய வகையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | கிராம சேவையாளர் அலுவலகங்கள் போதியளவு பரீட்சிக்கப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வீளைவு மட்டங்களை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்ட ஒதுக்கீட்டின் கீழ் மீரிகம பிரதேச செயலகத்திற்கு 188 நிர்மாணச் செயற்திட்டங் களுக்காக ரூபா 117,500,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட 188 நிர்மாணங்களில் 11 மாத்திரம் 100 சதவீதமும், 126 நிர்மாணங்கள் 25 சதவீதமும் நிறைவடைந்துள்ளன. 36 நிர்மாணங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஏல ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. 15 திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் 188 செயற்திட்டங்களுக்கான மொத்த மதிப்பீட்டான ரூபா 106,650,000 தொகையில் ரூபா | திட்ட அமுலாக்கத்தில் சிக்கல்கள் மற்றம் கட்டுநிதி கிடைக்காமை மற்றும் பொருட்களின் விலை உயர்வு, ஒப்பந்ததாரர்கள், வழங்குனர்கள் செயற்திட்டப் பணிகள் மற்றும் வழங்கல் பணிகளுக்கு முன்வராததால் செயற்திட்டங்களின் முன்னேற்றம் குறைந்துள்ளது. | நிதிஏற்பாடுகளை முறையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

68,270,726 இற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த நிதிஏற்பாட்டின் பயன்பாடு ரூபா 976,898 ஆக இருந்தது. அதாவது, ஒப்பந்த நிதிஏற்பாட்டில் பயன்பாடு நிதி முன்னேற்றம் 0.83 சதவீதமாகவும், ஒப்பந்த பெறுமதியில் நிதி முன்னேற்றம் 1.43 சதவீதமான மிக குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. இதனால், அரசினால் ஆண்டு தோறும் வழங்கப்படும் ஒதுக்கீடுகள் முறையாக பயன்படுத்தப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஜுன் 16, திகதிய 03/2021 ஆம் இலக்க கரும்பு, பித்தளை, களிமண், மரம் மற்றும் கிராமப்புற தொழில்கள் மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 2021 ஜுலை 15 திகதிய SMRIP/DEV/(V)/10/03/2021/(பொது) கடிதத்தின் பிரகாரம் , 2021 ஒரு கிராம சேவையாளர் பிரிவிற்கு ஒரு கிராமப்புற தொழில்முனைவோரை உருவாக்கும் திட்டத்திற்கு பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் போது, உணவு விற்பனை நிலையங்கள், தினசரி உணவு விற்பனை நிலையங்கள், கடைகள், காளான் வளர்ப்பு, அலங்கார மலர் செய்கை, ஆடைத் தொழில் தொடர்பான இயந்திரங்கள் எரிவாயு அடுப்புகள், கலப்பான்கள் என்பவற்றை வழங்க பயனாளிகளுக்கு வழங்க தேர்ந்தெடுக்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டது., ஆனால் அதற்கு மாறாக நீர்கொழும்பு, மினுவாங்கொடை மற்றும் மீரிகம பிரதேச செயலகங்கள் அவ்வாறான 102 பயனாளிகளுக்கு ரூபா.7,780,985 பெறுமதியான உபகரணங்களை வழங்கியிருந்தன. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட சுயதொழில் குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.எனினும் இது தொடர்பான விரிவான அறிக்கையொன்று உதவிப் பணிப்பாளர் திட்டமிடலிடமிருந்து அறிக்கையொன்ற கோரப்பட்டுள்ளதுடன் கிடைத்த உடன் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட நோக்கங்களுக்காக தகைமை பெறும் நலனிாலிகளுக்காக மாத்திர உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும் |

## 3.4 செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மினுவாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் மினுவங்கொடை நாளாந்த ஆண் பாடசாலையில் குழாய் கிணறொன்று நிர்மாணிக்கப்பட்டு நீர் பம்பியொன்று பொருத்தப்பட்டு குடிநீர் வழங்குவதற்காக ரூபா 1,000,000 ஆன மதிப்பீட்டுத் தொகைக்கு 2020 ஆம் ஆண்டின் போது செயற்திட்டமொன்ற ஆரம்பிக்கப்பட்டு ரூபா 800,714 செலவினமொன்ற மேற்கொள்ளப்பட்ட பின்னர் எதிர்பார்த்த நலன்கள் நிறைவேற்றப்படாமை காரணமாக செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | இந்நீர் செயற்திட்டம் தொடர்பான விரிவான அறிக்கையொன்று பிரதேச செயலாளரிடமிருந்து கோரப்பட்டுள்ளதுடன் அது கிடைத்தவுடன் உங்களுக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக | கிடைக்கும் நிதிஏற்பாட்டின் மூலம் பொது மக்களுக்கு ஆகக் கூடிய சேவையொன்று வழங்கும் வகையில் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது அத்தனகல்ல பிரதேச செயலக பிரிவினுள் பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 950,000 ஆன 05 செயற்திட்டங்கள் செயற்படுத்தகப்பட்டிருக்கவில்லை. சந்தையில் மூலப்பொருள் பற்றாக்கறை மற்றும் விலைகள் அதிகரித்தமை காரணமாக உரிய ஒப்பந்தக்காரர்களால் இந்த 05 செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது. | சந்தையில் மூலப்கொருள் பற்றாக்குறை மற்றம் விலை அதிகரிப்பு காரணமாக உரிய ஒப்பந்தக்கார்களால் இந்த 05 செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாதென அறிவித்திருந்தனர் | கிடைக்கும் நிதிஏற்பாட்டின் மூலம் பொது மக்களுக்கு ஆகக் கூடிய சேவையொன்று வழங்கும் வகையில் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஜாஎல பிரதேச செயலகம் தற்போது செயற்படும் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதனால், புதுக் கட்டம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ரூபா 165.34 மில்லியன் மதிப்பீட்டு தொகைக்கு கூடிய விரைவில் நிர்மாணித்து முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால் காணி தொடர்பாக எழுந்த பிரச்சினைகளால் ஏற்பட்ட காலதாமதத்தின் பின்னர் அத்திவாரத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக ரூபா 5,369,779 முற்பண தொகையினையும் செலுத்தியதன் பின் ஒப்பந்தப் பணி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது. பிறகு சுமார் ஒரு வருட காலத்திற்கு பின்னர் அந் நிறுவனத்தினாலேயே ரூபா 27 மில்லியன் செலவிடப்பட்டு அத்திவாரப் பகுதி நிர்மாணிக்கப்பட்டு நிர்மாணப் பணியின் எஞ்சிய பகுதியை ரூபா 145.33 பெறுமதிக்கு வேறொரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 2021 நவம்பர் 18 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிர்மாணித்து முடிப்பதற்கு இயலாது போயுள்ளது. | கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 145.33 மில்லியனுக்கு சின்ஹ ருவான் கன்ஸ்ரகஷன் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட திட்டத்தின் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இலங்கையில் மிக நீண்ட காலமாக ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் கம்பஹா மாவட்டத்தில் Covid-19 இன் இரண்டாவது அலை காரணமாக, நிர்மாணப் பணிகள் அவ்வப்போது தடைபட்டாலும், தற்போது நிர்மாணப் பணிகள் 85 சதவீதமான திருப்திகரமான அளவில் உள்ளன. | உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீரிகம பிரதேச செயலகத்தின் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் 19 நில செவன அலுவலகங்களும் அத்திவராம் மாத்திரம் இட்டுள்ள 07 நில செவன அலுவலகங்கள் காணப்படுவதுடன் பயன்படுத்தப்படும் நில செவன அலுவலகங்களிலும் வசதிகள் இல்லையென அவதானிக்கப்பட்டது. | நில செவன அலுவலகங்களுக்கான அலுவலக அமைப்பு மற்றும் உத்தியோகபூர்வ ஏற்பாடுகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஒதுக்கப்படுகின்றன. அதன்படி, அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள covid 19 தொற்று நிலைமை காரணமாக அமைச்சின் மூலம் நிதி ஏற்பாடுகள் கிடைக்காததன் பேரில் சில நில செவன அலுவலகங்கள் இடைநடுவிலேயே நிறுத்தப்பட்டுள்ளன. | பொது மக்களுக்கு உயர்ந்த வகையில் சேவை வழங்கக் கூடிய வகையில் உத்தியோகத்தர்களுக்கு அலுவலக வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வத்தளை பிரதேச செயலகத்திற்கு ஐந்து மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் 03 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ரூபா 167.9 மில்லியன் மொத்த செலவின மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது முதல் கட்டமாக தூர்வாரும் பணியை மேற்கொள்ளவும், இரண்டாம் கட்டமாக கட்டிடத்தை கட்டவும் முடிவு செய்யப்பட்டது. இரண்டாம் கட்டத்திற்காக பெறுகை செயற்பாட்டை மேற்கொண்ட பின்னர் தனியார் கம்பனியொன்றுக்க ரூபா 110,999,052 தொகைக்கு வெட் வரியின்றி 2016 திசெம்பர் 29 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் 2017 ஜனவரி 12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 350 நாட்களுக்குள் அதாவது 2017 திசெம்பர் 28 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கட்டிடம் | முதலில் கேள்வியை வழங்கிய டிரியோ கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனம் ரூபா. 24,049,996 ஆன வேலையை நிறைவேற்றியதன் பின்னர் திட்டம் கைவிடப்பட்டதையடுத்து, பின்னர் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 135.94 மில்லியனுக்கு திலக இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டதை அடுத்து, இலங்கையில் மிக நீண்ட காலமாக ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் கம்பஹா மாவட்டம், covid -19 இன் இரண்டாவது அலை காரணமாக அவ்வப்போது தடைபட்டிருந்த போதும் தற்போது நிர்மாணங்களின் முன்னேற்றம் 85 சதவீதம் திருப்திகரமாக நிலைமையில் உள்ளது. | உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| | | பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடிய நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. |

**3.6 பெறுகை செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஏப்ரல் 21 ஆந் திகதிய திருத்தப்பட்ட பெறுகை வழிகாட்டல்களின் 9.3.1(ஆ) இன் பிரகாரம், ரூபா 500,000 இற்கு மேற்பட்ட திருத்தங்களுக்காக வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெ குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2021 ஆம் ஆண்டின் போது 56-6456 ஆம் இலக்க கெப் வண்டி திருத்தத்திற்காக முகவர் நிறுவனத்திற்கு ரூபா 746,070 செலுத்தப்பட்டிருந்த போதும், அதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்தவேலைகள் உள்ளூர் முகவர் நிறுவனமொன்று மூலம் மேற்கொள்ளப்படவில்லை, மேலும் உள்ளூர் கராஜ் மூலம் திருத்த வேலைகளை மேற்கொள்ளும் போது பெறுகை குழு தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியுமாக இருப்பதால் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பபடவில்லை. | பெறுகை வழிகாட்டுதல்களின் மூலம் விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டு பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 50 இலட்சம் தொகையினை செலவிடப்பட்டு களணி பிரதேச செயலகத்தினால் நிர்மாண செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்ற திப்பிட்டிகொட சேவை இல்லம் பல்நோக்கு கட்டிடமாக நிர்மாணிக்கப்பட்டது. அக்கட்டிடத்தில் கிராம சேவை உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய உத்தியோகத்தர் ஆகிய சகல உத்தியோகத்தர்களும் கடமை புரிய வேண்டியிருந்த போதிலும் கட்டிடம் கட்டப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் பிரதேச சபைக்க உரித்தான காணியில் நிர்மாணிக்கப் பட்டமையால் | குறித்த கட்டிடத்தின் கீழ் மாடி சேவை நிலைய அலுவலகத்தினை பராமரித்துச் செல்வதற்காக வழங்குவதாக பிரதேச சபையால் குறிப்பிடப்பட்டுள்ளதாக. | கட்டிடம் நிர்மாணிப்பதற்கு முன் அதன் உரிமை மற்றும் பயன்பாடு தொடர்பான சிக்கல்கள் உருவாகாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அந்த சேவை இல்லத்தில் கடமைகளை புரிவதற்கு பிரதேச சபையால் இடமளிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீரிகம பிரதேச செயலகத்தில் அனர்த்த பிரிவிற்குச் சொந்தமான டிராக்டர் மற்றும் பவுசர் 2017 ஆம் ஆண்டின் பின்னர் அதாவது நான்கு வருடங்களுக்கு முன்னரான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | குறித்த டிராக்டர் மற்றும் பவுசர் 2020 ஆம் ஆண்டில் சேவை தேவைப்பாட்டிற்காக பயன்படுத்தியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களிலிருந்து அதிக உயர் பயன் பெற வேண்டும். |

.

## 3.8 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மினுவாங்கொடை பிரதேச செயலகம் அமைந்துள்ள 0.1744 ஹெக்டேயர் அளவிலான காணிக்க உறுதியொன்று இல்லாமை காரணமாக அதன் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் கட்டான பிரதேச செயலகக் கட்டிடத்திற்கு சொந்தமான காணியினை ரூபா 15,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருந்த போதிலும் அந்த காணியின் உரிமை காணி மறுசீரமைப்பு அதிகார சபைக்கு உரித்தாக இருந்தது. | மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணியை மதிப்பீடு செய்து தருமாறு பல வருடங்களாக விலை மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் பொது கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், இதுவரை தேவையான பணிகள் மேற்கொள்ளப்படாததுடன் உறுதியொன்று இல்லாமையால் அதனை மேற்கொள்ள முடியாது எனவும் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள், இந்த காணியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டான பிரதேச செயலகத்தின் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமானது என்றாலும், ஆவணங்களில், கட்டான பிரதேச செயலகத்திற்கு மாற்றப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | காணியின் உரித்து தொடர்பாக உள்ள சிக்கல்கள் தொடர்பாக பரீட்சித்து அவற்றை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | பிரதேச செயலகத்தின் மூலம் அல்லது பிரதேச செயலாளர் அதிகாரத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட திவுலப்பிட்டிய, வத்தளை, கட்டான, கம்பஹா, அத்தனகல்லை, ஜாஎல மற்றும் தொம்பே பிரதேச செயலகங்களுக்குரிய சேவை இல்லம் / 96 நில செவன | கட்டிடங்களை மதிப்பீடு செய்யும் போது அந்த காணிகளினது உரிமைகள் பற்றிய பிரச்சினையினால் மதிப்பீடு மேற்கொள்வதற்கு முடியாது உள்ளது. இக் காணிகளில் அநேகமானவை | காணிகளின் சீரான உரித்தினை பிரதேச செயலகங்களுக்கு கையேற்று அக்காணி மற்றும் கட்டிடங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகபூர்வ அலுவலக கட்டிடங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி தேசிய சபைக்கு சொந்தமானதால் மதிப்பீடு செய்வதற்கு முடியாதென அறியதருகின்றேன். மாவட்ட செயலகத்திடம் இல்லாத நடைமுறையல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்தல் சிக்கலான ஒன்றாக இருப்பதால் இது தொடர்பாக திறைசேரி கணக்குப் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். | பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 3.9 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்கு உரித்தான கெப் வாகனத்திற்கு 1999 யூலை மாதம் நேர்ந்த விபத்து காரணமாக காப்புறுதி மூலம் அறவிடப்பட முடியாத இழப்பு ரூபா 189,360 ஆகும். அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் விபத்து நேருவதற்கு காரணமாக இருந்த வானின் சாரதியே பொறுப்பினை ஏற்க வேண்டி இருந்தது. அதன்படி சம்பந்தப்பட்ட சாரதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 23 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் அவ்வழக்கின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் இடம்பெறாமையால் அதற்கான இழப்பினை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மினுவாங்கொடை பிரதேச செயலகத்தின் 251-3437 வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்த தொடர்பாக சிரேஷ்ட உதவி அரச சட்டத்திதரணி ரிஸ்னி பிர்தவ்ஸ் அவர்களிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் வழக்கின் முன்னேற்றம் தொடர்பாகுறித்த தரப்பினரிடமிருந்து விசாரித்து அறிக்கையிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பரிசோதனையை விரைவில் மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 2021 ஒக்தோபர் மாதம் 20 ஆந் திகதி கம்பஹா மாவட்ட மோட்டார் வாகன அலுவலகத்திற்குரிய சமிஞ்சை கோபுரம் உடைந்து விழுந்தமையால் நிதிப் பிரமாணம் 104(4) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நட்டங்கள் தொடர்பான பரிசோதனை இறுதி அறிக்கையின் பிரகாரம் திட்டமிடல் பிரிவு கட்டிடத்திற்கும் அதன் | சமிஞ்சை கோபரம் உடைந்து விழுந்தமை தொடர்பாக நியமிக்கப்பட்டிருந்த குழுவின் மூலம் குறித்த நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பரிசோதனையை விரைவில் பூர்த்தி செய்து குறித்த நட்டத்தை அறவிட வேண்டும் |

உபகரரணங்களுக்கும் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 861,938 ஆக இருந்தது. நிதிப் பிரமாணம் 104(1)(ஆ) பிரகாரம் முறையான பரிசோதனையொன்றை நடாத்துவதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு கம்பஹா மாவட்ட செயலகத்தினால் பரிந்துரைக்கப் பட்டிருந்ததுடன் உரிய நடவடிக்கைகள் தாமதித்த காரணத்தினால் இந்நட்டத்தை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அத்தனகல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் குடும்பங்களில் அத்துமீரிய வீடுகளில் வாழும் 399 குடும்பங்களும் 318 தற்காலிக வீடுகளும் மலசலகூட வசதிகள் இல்லாத 345 குடும்பங்களும் வீதி வசதிகள் இல்லாத குடும்பங்கள் 269 உம் சுத்தமான நீரில்லாத குடும்பங்கள் 662 உம் மின்சார வசதிகள் இல்லாத 564 வீடுகளும் வேலை செய்யக்கூடிஎய வயதினை கடந்த 27,118 பேர் வேலையற்று இருந்ததுடன் குறைந்த வசதிகள் இல்லாமல் வாழும் அதிகளவிலான தரப்பினர் இருப்பது அவதானிக்கப்பட்டது. | அதிகார பிரதேசத்தில் சிக்கல்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளதுடன் கொவிட் தொற்று நிலைமையால் இக்கட்டுப்பாடு சிரமமாக உள்ளது. எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டில் கம்பஹ1ா மாவட்டத்தில் காணப்படும் சிக்கல்கள் முடியுமான வரையில் | குறைந்த வசதிகள் கூட இல்லாமல் வாழ்பவர்களை கட்டியெழுப்புவதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | மீரிகம பிரதேச செயலக பிரிவில் வாழும் 49,886 குடும்பங்களுக்கு இடையே அத்துமீறிய காணிகளில் குடியிருக்கம் 97 கடும்பங்களும் தற்காலிக வீடுகளில் வாழும் 407 குடும்பங்களும் மலசலகூட வசதிகள் இல்லாத 745 குடும்பங்களும் பொது நழீர் குழாய் பயன்படுத்தும் 676 குடும்பங்களும் மின்சாரம் இல்லாத 478 குடும்பங்களும் வீதி வசதிகள் இல்லாத 858 வீடுகளும் என குறைந்த வசதிகள் இல்லாமல் வாழும் அதிக தரப்பினர் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2021 திசெம்பர் 23 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரை எழுதப்பட்ட ரூபா 1,183,234 பெறுமதியான 7 காசோலைகள் | குறித்த பொருட்களை பெற்றுக் கொண்டு காசோலைகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொருட்களை பெற்றுக்கொண்ட பின்னர் மாத்திரம் காசோலைகள் |

| | | | |
|---|---|---|---|
| | நீர்கொழும்பு பிரதேச செயலகத்தின் விதாதா நிலையத்தின் உத்தியோகத்தர்கையில் வைக்கப்பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி 02 ஆந் திகதி வரையிலும் காசோலைக்குரிய பொருட்கள் கிடைத்திருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டிருந்தது. | எழுதப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 சனவரி 12 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க சமூகபலப்படுத்தல் மற்றும் நலன்புரி அமைச்சின் சுற்றறிக்கையின் 7.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் 31 ஆந் திகதி வரையிலும் சிரேஷ்ட பிரஜை படிகள் நலனாலிகள் தொடர்பாக மீண்டும் கணிப்பீடொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்தின் 32 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென |
| (உ) | 2021 திசெம்பர் 21 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க காணி அமைச்சின் உதவிச் செயலாளரின் L/3/J95/HW/11 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பேலியாகொட புத்தளம் வீதியை விரிவாக்கம்போது கையேற்கப்பட்ட 406 காணிகளுக்க உரிய இழப்பீடும் 518 காணிகளுக்குரிய வட்டியும் செலுத்தப்படாதிருந்ததுடன் 44 ஆம் பிரிவின் கீழ் கையளிக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வில்லை. அதற்குரிய 1221 கோவைகளில் 861 அலுவலகத்தில் காணப்படவில்லையென பிரதேச செயலகத்தினால் அறிவிக்ப்பபட்டிருந்தது. | இதற்காக போதியளவு தகவல்கள் பிரதேச செயலகத்திடம் இல்லாமையால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் தகவல்கள் உள்ளதா என விசாரித்திருந்த போதும் இதுவரை பதில் கிடைக்கவில்லை. | கோவைகள் நாளதுவரையாக்கப்பட்டு இழப்பீட்டுக் கொடுப்பனவு துரிதப்படுத்தப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப் பட்டிருந்த போதும் அதற்காக 20 இலக்குகள் இனங்காணப் பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த இலக்குகளை நிறைவேற்றும் செயன் முன்னேற்றம் | நாட்டில் காணப்பட்ட covid 19 தொற்று நிலைமை காரணமாக அவ்வப்போது நாடு மூடப்பட்டமை, அரச நிறுவனங்கள் மூடப்பட்டமை, சுழற்சி | திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பாரத்த 18 இலக்குகளுக்காக 0 முதல் 49 சதவீதம் மற்றும் எதிர்பார்தத் இலக்கில் 02 இற்காக 50 சதவீதம் முதல் 74 சதவீதம் இற்கு இடைப்பட்ட அளவில் காணப்பட்டன. | முறையில் உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டமை போன்ற காரணங்களால் எதிர்பார்த்த இலக்கினை அடைய முடியாதிருந்தது. | |

**5 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் மாவட்ட செயலகத்திற்காக பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் 3,457 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 3,169 ஆக இருந்தமையால் வெற்றிடங்கள் 288 ஆக இருந்தது. | ஒவ்வொரு மாதமும் 15 ஆந் திகதி மற்றும் 30 ஆந் திகதி மாவட்டத்தில் காணப்படும் பதவியணி வெற்றிடங்கள் பொது நிர்வாக அமைச்சு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தின் மூலம் (misco,moha) இல் நாளதுவரையாக்கப்படும். | செயற்திறனாக பேணிச் செல்வதற்கு தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பஹா மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள 13 பிரதேச செயலகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட 1177 கிராம உத்தியோகத்தர்களில் 201 கிராம உத்தியோகத்தர் பதவிகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடங்களாக காணப்பட்டன. | 2018 ஆம் ஆண்டின் பின்னர் கிராம சேவையாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படாமையால் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு தடையாக உள்ளது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பிரகாரம் ஒரே சேவை நிலையத்தில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவை புரிந்திருந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு உட்பட வேண்டிய போதிலும் மீரிகம பிரதேச செயலகத்தில் 6 ஆண்டுகள் முதல் 8 ஆண்டு வரை காலம் சேவையிலுள்ள 134 உத்தியோகத்தர்களும் நீர்கொழும்பு பிரதேசத்தில் 6 ஆண்டு முதல் 9 வரை சேவையில் ஈடுபட்டிருந்த 09 உத்தியோகத்தர்களும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இச்சேவைகளுக்காக இடமாற்ற நடைமுறை செயற்படுத்தப்பட்டிருந்த போதும் இந்த ஊழியர்களுக்கு இவ்வாறு ஒரே சேவை நிலையத்தில் தரித்திருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரதேசத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யப்படாமை, இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் மேன்முறையீடுகளை சமர்ப்பித்து இடமாற்றத்தை இரத்துச் செய்தல், பதிலால் வ''ருகை தராமை அடிப்படையில் உத்தியோகத்தர் இடமாற்றம் செயற் படுத்தப்படாமையால் உத்தியோகத்தர்கள் அதே இடத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். . | சகல உத்தியோகத்தர் களுக்கும் வெவ்வேறு அலுவலகங்களில் சேவை புரியக் கூடிய வகையில் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்க இணங்க இடமாற்றம் செயற்படுத்தப்பட வேண்டும் |